REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 258

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: சித்திரை 1உ. செவ்வாய் (13—4—54) ☆ ★ ★ வெளியூர்: சித்திரை 2உ. புதன் (14—4—54)

'நமது வளர்ச்சியைத் தடுத்துவருவது கடவுளும்—மதமும்—ஜாதிப் பாகுபாடுமேயாகும்'

—o—

'பெரியார்—அண்ணு உழைப்பால் மடமைக்கு எதிராகப் புயல் கிளம்பி இருக்கிறது'

'சனாதனத்தை சிறந்ததெனக்கொண்ட ஜாதிவெறியர்களும் அதை வெளிப்படையாகக் கூற வெட்கப்படுகின்றனர்'

திராவிட முன்னேற்றகழகத்தின் தனித்தன்மையை விளக்க சமூக சீர்திருத்த மாநாடே தக்க விடை'

தஞ்சை சமூக சீர்திருத்த மாநாட்டில் தலைவர் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. தந்த தெளிவுரை

"இந்தச் சமுதாய சீர்திருத்தத்தில் நாம் காட்டும் உறுதியும்—ஆர்வமும் தான் மற்ற அகில இந்தியக் கட்சிகளிலிருந்தும்—ஏன், உலகத்திலுள்ள எல்லா இயக்கங்களிலிருந்தும் நம்மைத் துல்லியமாகப் பிரித்துக் காண்பிக்கிறது. நம்மை மற்றவர்கள் புரிந்து கொள்ளாமல் திண்டாடி—அந்தத் திண்டாட்டத்தை மறைக்க ஒரு தவறான கணக்குப் போட்டுவிட்டு அந்தக் கணக்கு நம்முடைய உண்மையான பலத்தைக் கணிக்காததாக மாறி—இறுதியில் எதிரிகளின் செயல் ஏளனத்தில் முடிவதும் இந்த சமுதாயம் சம்பந்தப்பட்ட விவகாரந்தான்."

—என்று, தஞ்சை மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த மாநாட்டிற்கு தலைமை வகித்த தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"நம்மைத் தவிர, மற்ற யாரும் அரசியல் மாற்றத்தையும், அதிகார விநியோகத்தையுமே, மக்கள் வாழ்வுக்குப் பிரதானமாகக் கருதுகிறார்கள். நாம், 'எல்லாவற்றிற்கும் அடிப்படையான மனித உள்ளம் மாசு மருவற்றதாக முதலில் மாறித் தீரவேண்டும்; ஒவ்வொருவரும், தன்னைத்தானே ஒரு போதனாசிரியராக மாற்றிக்கொள்ள வேண்டும்; அரசியல் எப்படி அமைய வேண்டும் என்பதை ஒரு குழுவினர் அல்ல—ஒவ்வொரு மனிதனும் முடிவுகட்ட வேண்டும்,' என்பதைப் பிரதானமாகக் கொள்ளுகிறோம். இந்த எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ளவே, இதுபோன்ற சமுதாய சீர்திருத்த மாநாடுகளை அவ்வப்போது கூட்டுகிறோம். சமுதாயத்திலே தெளிவு ஏற்படாத வரை, அரசியலிலும் தெளிவு தோன்றாது. இதை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க நம்மைத் தவிர வேறு யாரும் கிடையாது."

"இப்போது பிரசாரம் செய்யப்படுவதைப்போல, மனித சமுதாயத்தையோ அல்லது உலகத்தையோ இருள் கப்பிக் கொண்டிருக்கவில்லை; ஒவ்வொரு மனித உள்ளத்திலும்தான் இருள் மண்டிக் கிடக்கிறது. உள்ளத்து இருளை ஒழிக்க சட்டங்கள் பயன் தராது; அரசாங்கத்தை அமைத்துவிடும் செயல் ஒன்றினால் மட்டும் சாத்தியமாகிவிடாது."

"ஒவ்வொரு மனிதனையும் சிந்திக்கும் திறன் படைத்தவனாக மாற்ற வேண்டும்; அவனுடைய சூழ்நிலையில், முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக எது இருக்கிறது என்பதை அவன் தெளிவாக உணருமாறு செய்ய வேண்டும்; நெடுங்காலமாக நமது சிந்தனையைச் சிறையில் வைத்து வந்தது மதமும்—கடவுள்களும் என்பதை அவனுக்கு உணர்த்த வேண்டும்; நாம் வளர்ந்திருக்க வேண்டிய நியாயமான வளர்ச்சியைத் தடுத்தி நிறுத்தி வைத்தது மதம்—கடவுள்கள்—ஜாதிப் பாகுபாடு என்பவைகள்தான் என்பதை அவன் புரிந்துகொள்ளுமாறு பணியாற்ற வேண்டும். அரசியல் என்பது நாலு பேருக்கும் பொதுவான விவகாரங்களை பொறுப்புடன் நடத்திச் செல்வதற்கு மட்டுமே பயன்படும் என்பதையும், அந்தப்படி நாலு பேர் பொதுவான ஒரு முடிவெடுப்பதற்கே, மதமும்—கடவுளும்—ஜாதிப் பாகுபாடும் தடையாக நிற்கிறதென்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டும்."

"சமுதாயத்திலே குறைகளற்ற நிலை ஏற்படுவது எவ்வாறு என்பதை ஒவ்வொரு மனிதனுக்கும் உணர்த்திவிட்டோமானால், அரசியல் புரட்சி தானாகவே நடந்துவிடும் என்பதே என் தாழ்மையான எண்ணமாகும். பொருளாதார ஏற்றத் தாழ்வைவிட சீர்கெட்டுக் கிடக்கும் சமுதாய ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுத்தும் தடங்கல்களும்—ஆபத்துகளும் அதிகம்—மிகமிக அதிகம். மனித சமுதாயத்துக்கு பொருளாதார கோடுவினால் ஏற்படும் ஆபத்துகளைவிட, மேல்ஜாதி—கீழ்ஜாதி பாகுபாட்டினால் ஏற்படும் விளைவுகள் பயங்கரமானவை."

"மதப் பூசலும்—ஜாதிச் சழக்கும்—ஆண்டவனின் லீலா விநோதங்களும் — பொய்மையின் வெற்றியும் — புராணங்களின் புளுகுகளும் அறவே நீங்கிய இன்பந்தவழும் எதிர்காலத்தை— அனைவரும் சமம் என்ற நியதியின் அடிப்படையில் மனிதன் வாழும் எதிர்காலத்தை—நிமிர்ந்து நின்று, புன்னகையுடன் வரவேற்போம். இத்தனை நாளும் இருந்துவந்த இழி நிலைமைக்கு நிரந்தரச் சாவுமணி அடித்துவிடுவோம்."

அவர் மேலும் பேசியதாவது:—

"இன்று நாம் நடத்தும் இந்த மாநாட்டில், இப்போது அமர்ந்துள்ளதைப் போன்ற பெருத்த எண்ணிக்கையுள்ள மக்கள் திரளவும், பேசும் என்னைப் போன்றவர்கள் காயப்படாமல் தப்பித்துக்கொள்வதற்கும் நாம்—தி. மு. கழகத் தோழர்கள்—மிகப் பயங்கரமான பாதைகளைக் கடந்து வந்திருக்கிறோம். புயலென்ச் சீறிப்பாய்ந்த எதிர்ப்புகளைச் சமாளித்திருக்கிறோம். எத்தனையோ தோழர்களின் வாழ்வைப் பலியாக்கி இந்த நிலைக்கு வளர்ந்திருக்கிறோம்.

"கடந்த முப்பது ஆண்டு காலமாக பெரியார் ராமசாமி அண்ணாதுரை போன்றவர்கள் உழைப்பால், இன்று நமது நாட்டிலே, மூட நம்பிக்கைகளுக்குக் கணிசமான அளவுக்கு எதிர்ப்பு கிளம்பிவிட்டிருக்கிறது.

"சனாதன தர்மமே மிகச் சிறந்தது எனப் பசப்பும் ஜாதி வெறியர்கள்கூட, தங்களுடைய மோசமான திட்டங்களை வெளியில் அமுல் நடத்த அச்சப்படும் நிலைக்கு ஆளாகிக் கிடக்கிறார்கள். ஜாதிச் சின்னங்களை அணிவது சரியானது, மூடநம்பிக்கையின் பாற்பட்டது என்பதை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், கூடுமான வரையில் நீளத்தையும் அகலத்தையும் குறைத்துக் கொள்கின்றனர்."

"இதுவரையில், சமுதாயத்தின் கோணல் மாணல் தன்மைகளால் மட்டுமே, கவுரவமான வாழ்க்கை நடத்திவந்த தோழர்கள்கூட, சமுதாயம் சீர்திருந்தியே ஆகவேண்டும் என்று அக்கம் பக்கம் பார்த்தாவது பேசும் நிலைமைக்கு நாம், நாட்டிலே ஒரு நல்ல விதமான—ஒளி பொருந்திய—பாதைகளை வகுத்துக் காட்டியிருக்கிறோம். சமுதாய ஏற்றத் தாழ்வின் காரணமாகவே ஒருவன் மிக்கான அந்தஸ்து வகிப்பது கேவலமானதென்ற நிலைமைக்கு மக்களின் உள்ளத்திலே ஒரு விதத் தெளிவை உண்டாக்கிக் காட்டிவிட்டோம்."

"நாம் இன்னமும் இதுபோன்ற சமுதாய சீர்திருத்த மாநாடுகளைக் கூட்டி, சமுதாயத்தின் சீர்கேடுகளைச் சுட்டிக் காட்ட ஓயாமல் உழைத்து வருகிறோம். காரணம் சமுதாயத்திலே உள்ள குறைகளைத் தெரிந்துகொண்ட அளவுக்கு, அவைகளைப் போக்கும் முறைகள் பற்றியும், அதற்கான நெஞ்சுறுதியையும் இன்னும் மக்கள் பெறவில்லை.

"ஆகவேதான் நாம் உழைக்கிறோம்—மீண்டும் மீண்டும் மாநாடுகள் கூட்டி மக்களின் உள்ளங்களிலுள்ள மாசுகளைத் துடைத்தெறியும் மகத்தான பணியினைச் செய்ய சளைக்காமல் போராடுகிறோம்.

"இத்தகையான நமது போராட்டத்திலே தோல்வி காணும் பரம்பரைதான் தொடருகிறதென்பது மட்டுமல்ல; கலைக்கப்பட்ட தேனீக்கள் போல, பதைத்தோடிவந்து நமது தோளுடன் தோளாகப் பணியாற்றும் வீரர்களின் தொகையும் விரைவேகத்தில் நாளுக்கு நாள் ஏறிக் கொண்டிருக்கிறது.

"இதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்க்க, மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டியதில்லை. கட்சிகளை அமைக்கும் விதம் பற்றி எழுதி வைத்துப்போன நிபுணர்களின் குறிப்புகளைத் தேடி அலைய வேண்டியதில்லை. ஒரே ஒரு காரணந்தான்—அதுவும் தெளிவான காரணந்தான். அதுதான் தி. மு. கழகத்திற்கு ஒரு தனித்துவம் இருக்கிறது—மற்ற எந்த இயக்கங்களுக்கும் இல்லாத ஒரு பெருஞ் சிறப்பு இருக்கிறது.

"ஆரவாரமிக்க அரசியல் சந்தடியிலேயே நானும் கழித்தவன் தான். நான்தோறும் எனக்கு ஏற்பட்டுவரும் அரசியல் அனுபவங்களிலிருந்து எதைக் காணுகிறேனென்றால், அரசியல் அரங்கத்திலே மக்களுக்காகப் பரிந்து பேசி, சொர்க்க வாழ்வை நிர்மாணிக்க வேண்டும் என்று உரத்தக் குரலெழுப்பும் தோழர்கள் அத்தனை பேரும், சமுதாய சீர்திருத்தம் என்றாலே நடுங்கிச் சாகிறார்கள்; சமுதாயம் என்ற பேச்சை எடுத்தாலே தங்கள் பதவி நாற்காலி தடாரென ஒடிந்து விட்டதாக மிரட்சி அடைகிறார்கள்; அதற்குக் காரணம், இவர்களுக்கு பலமில்லை என்றோ, அல்லது சமுதாயத்தில் ஏற்படும் மாறுதலை விரும்பாதவர்கள் என்றோ, முடிவு கட்டிவிட நான் தயாராயில்லை.

"அவர்கள் எல்லோரும் ஒரு நாள்—அல்லது ஒரு வாரம், புரட்சியைப் பற்றியே கற்றறிந்

(4-ம் பக்கம் பார்க்க)

கோபால்ட் குண்டின் கொடுமை!

—

பட்டுச் செல்லுமிடமெல்லாம் பாழாகி விடுமாம்!

லண்டன், ஏப். 11—நீர்வலிக் குண்டுக்கு அடுத்தபடி வரவிருக்கும் கோபால்ட் குண்டு பற்றி முன்னாள் பிரதமர் அட்லீ இன்று குறிப்பிட்டார். கோபால்ட் குண்டிலிருந்து விஷமேகம் உண்டாகி அது படரும் வழியில் உள்ளதை எல்லாம் அழித்துக் கொண்டு போகுமென்று விஞ்ஞானிகள் கூறுவதாகவும் சொன்னார். இதையெல்லாம் யாரும் உபயோகிக்கமாட்டார்களென்று சும்மா இருப்பது தவறு என்றும் ஒப்பந்தம் ஏற்பட முயலவேண்டும் என்றும் சொன்னார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 13—4—54 செவ்வாய்

புதிய கடன்!

'தேசியத் திட்டம்' என்ற பெயரில், பொதுமக்களிடமிருந்து பெருந் தொகையைக் கடனாகக் கேட்டிருக்கிறது யூனியன் அரசாங்கம். எந்தெந்தப் புதிய திட்டங்களை வெற்றிகரமாக முடிப்பதற்காக, இக்கடன் எழுப்பப்படுகிறது என்பதற்கான விரிவான விளக்கத்தை யூனியன் அரசாங்கம் இதுவரை வெளியிடவில்லை. மேற்கொள்ள இருக்கும் திட்டங்களைப் பற்றிய விவரம் திட்டவட்டமாக யூனியன் அரசாங்கத்திற்கே தெரிந்திருப்பதாகவும் சொல்வதற்கில்லை.

அப்படி தெரிந்திருக்குமானால், அத்திட்டங்களை நிறைவேற்றும் வகையில் செலவாகும் மதிப்பீடு தொகை இவ்வளவுதான் இருக்குமெனக் கணக்கிட்டு, அத்தொகையை மட்டுமே குறித்து, அதைக் கடனாகக் கொடுத்து உதவுமாறு யூனியன் அரசாங்கம் பொதுமக்களைக் கேட்க முன்வந்திருக்கும். எப்பொழுது இந்த நியாயமானத் துறையைப் பின்பற்ற அரசாங்கம் தவறிவிட்டதோ, அதிலிருந்தே மேற்கொள்ள இருக்கும் திட்டங்களைப் பற்றிய ஏற்பாடு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை என்பது வெட்டவெளிச்சமாகி விட்டது.

பொதுவாக, யூனியன் அரசாங்கத்திடம் உருப்படாத திட்டங்கள் ஏராளமாக உள்ளன என்பதை நாம் அறிவோம். அத்திட்டங்களில் எவை எவைகளை முதற்கண் மேற்கொள்ள அரசாங்கம் முன்வந்திருக்கிறது, அவைகளை நிர்மாணிக்கத் தேவைப்படும் தொகை எவ்வளவு என்பதிலும் யூனியன் அரசாங்கம் முடிவிற்கு வந்திருப்பதாகவும் சொல்வதற்கில்லை. இத்துறையிலாவது முன்னேற்பாடான ஒரு முடிவு அரசாங்கத்திற்கு இருக்குமானால், உடனடியாக நிர்மாணிக்க இருக்கும் திட்டங்களை விளக்கிக் கூறி, அவைகளுக்கும் பிடிக்கும் செலவுத் தொகையையும் வெளியிட்டு, அவைகளுக்காகக் கடனாகப் பணம் கொடுக்குமாறு பொது மக்களைக் கண்டிப்பாகக் கேட்கத் தவறி இருக்காது. ஆனால், யூனியன் அரசாங்கமோ, மேற்கொள்ள இருக்கும் திட்டங்களையும், அதற்கான உத்தேச செலவுத் தொகையையும், மூடுமந்திரமாகவே வைத்துக் கொண்டு, பொதுமக்களை 'தேசிய திட்டம்' எனும் பெயர் கூறி, பெருந்தொகையைக் கடனாகக் கேட்டிருப்பது வியப்புக்குரியதாகவே இருக்கிறது.

பொதுமக்களிடமிருந்து எவ்வளவு பணத்தைத்தான் கடனாகப்பெறத் தீர்மானித்து இருக்கிறது என்பதைக் குறித்துக் காட்டத் தவறியதோடுமட்டுமல்லாமல், எவ்வளவு காலத்திற்குள்ளாக அக்கடன் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் குறிக்காமல், மறு கட்டளை வரையில் என மழுப்பி விட்டிருக்கிறது.

பொதுமக்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கடன் தொகையையும் குறிப்பிட்டு, அது வசூலிக்கப்பட வேண்டிய நாள் கணக்கையும் நிர்ணயித்து, கடன் கோரிக்கையை வெளியிட்டால், கடன் கேட்கும் பெருந் தொகை முழுவதையும், குறிப்பிட்டுள்ள காலத்திற்குள்ளாக, பொதுமக்கள் கொடுக்க முன்வராமற்போனால் என் செய்வது என்ற அச்சத்தின் காரணமாகத்தான், யூனியன் அரசாங்கம் அந்த இரு இனங்களையும் குறிப்பிடாமல் விட்டிருக்கிறது என யூகிப்பதற்கு இடமிருக்கிறது. நாட்டில் நிலவிவரும் பண நெருக்கடியை, யூனியன் அரசாங்கம் அறிந்துகொள்ளாமல் இருக்க நியாயமில்லை. நிற்க,

'கடனாகக் கிடைப்பதானால், இரண்டு யானையையும் கடனாகக் கொடு' எனப் பழமொழி ஒன்று கூறப்படுவதுண்டு. இதே மனப்பான்மையுடன்தான், யூனியன் அரசாங்கம் 'தேசிய திட்டம்' எனும் பெயரால் பொது மக்களிடமிருந்து கடன் எழுப்பக் கிளம்பி இருக்கிறது.

பொதுவாக, அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்து உதவுகிறவர்கள் பெரும் பெரும் பணத்திமிங்கலங்களே அல்லாது, நடுத்தர மக்களோ, சாதாரண மக்களோ, அல்லவே அல்ல. ஒரு அரசாங்கம் எழுப்பும் கடன் தொகையில் மொத்தத்தில் ஐந்து சதவிகிதத்தைக்கூட பின் குறிப்பிட்ட இரு பிரிவினராலும் கொடுக்கப்படுவது கிடையாது. அவர்களிடத்தில் பணம் மிச்சமாக இருந்தால் அல்லவா, அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்து உதவுவதற்கு? எனவே, அரசாங்கம் அவ்வப்பொழுது எழுப்பும் கடன்களைக் கொடுத்து உதவும் வாய்ப்பும், வசதியும் இயல்பாகப் பெற்றுள்ள பாங்கிகளும், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளும், அவைகளில் அங்கம் வகிக்கும் ஆலை முதலாளிகளுமதான், இப்பொழுது எழுப்பப்பட்டுள்ள தேசிய திட்டக் கடனையும் பூர்த்திச் செய்ய வேண்டும். அவர்கள், யூனியன் அரசாங்கம் கேட்டுள்ள கடனை எந்த அளவிலும், எவ்வளவு விரைவிலும் பூர்த்திச் செய்கிறார்கள் என்பதை இனிதான் பார்க்க வேண்டும்.

யூனியன் அரசாங்கத்தின் தொழில் நிர்மாணக் கொள்கையைக் குறித்து, பண முதலைகளுக்குக் கணிசமான அதிருப்தி இருந்துவருகிறது என்பதை அரசாங்கம் அறிந்தே இருக்கிறது. தங்களுக்குள்ள அதிருப்தியைச் செயலாற்றும் வகையில், அரசாங்கக் கடன் பிரச்னையை வாய்ப்பாகக் கொண்டு, தாராளமாகப் பெருந் தொகையைக் கடனாகக் கொடுக்கப் பணமூட்டைகள் தயக்கம் காட்டினாலும் காட்டக்கூடும். வேண்டாவெறுப்பாகக் கொடுக்கும் கொஞ்சம் தொகையைக்கூட, உடனடியாகக் கொடுக்காமல் காலதாமதம் செய்து, கொடுக்கக்கூடும் என்பதிலும் சந்தேகமில்லை. நிற்க,

தான் எழுப்பியுள்ள கடனுக்கு, எவ்வளவு தாராளமாகப் பணம் கிடைக்கிறதோ, அதையும், எவ்வளவு குறுகிய காலத்துக்குள் அத்தொகை கிடைக்கிறதோ, அதையும், ஒரு அளவுகோலாகக் கொண்டு, தனது தொழில் நிர்மாணத் துறையில் புதியதோர் மாற்றத்தைச் செய்ய யூனியன் அரசாங்கம் முன்வந்தாலும், அதில் ஆச்சரியப்படத்தக்கது ஒன்றுமில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைக்கு வந்து மூன்று ஆண்டுகள் நிரம்பிய பின்னரும், வேலையற்றோர் தொகை குறைவதற்குப் பதிலாக கூடியிருப்பது, யூனியன் அரசாங்கத்தைப் பற்றிக் கொண்டுள்ள பொருளியல் மதிக்குறைவையே எடுத்துக் காட்டுகிறது. புதிய தொழில் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டும், நாட்டு மக்களின் வேலையின்மையைப் போக்க முடியாத ஒரு நிலை உண்டாகுமானால், அத்தகைய திட்டங்கள் நாடு முழுவதும் பரவலாக இலலாததும், திட்டத்தின் அடிப்படையில் அமைந்துகிடக்கும் குழப்பமுமே காரணமாகும் என சொல்லத் தேவை இல்லை.

வேலையின்மை தீவிரமாகி வரும் காரணத்தால், மக்களின் வாங்கும் சக்தியும் வேகமாக வீழ்ச்சியுற்று வருகிறது. எனவே, தனிப்பட்டவர்கள் ஏதாவது புதியத் தொழில்களைத் துவங்குவதிலும் தயக்கம் காட்டுகின்றனர். போட்ட முதலுக்குப் போதிய ஆதாயம் கிடைக்காதே என அச்சம் கொள்ளுகின்றனர். ஆதலால், அவர்களிடம் முடங்கிக் கிடக்கும் பணம் மதிப்பிழந்து வெறும் குப்பையாகப் பயனற்றுக் கிடக்கிறது. இத்தகையவர்கள் யூனியன் அரசாங்கம் எழுப்பியுள்ள தேசிய திட்டக் கடனுக்குத் தாராளமாகக் கொடுக்க முன்வருவர் என்பதில் துளியும் சந்தேகமில்லை. அரசாங்கத்திற்குக் கடன் கொடுப்பதால், குறைந்த வட்டியாக இருந்தாலும் முதலுக்கு மோசம் ஏற்படாதே என்ற நம்பிக்கையில், இவர்கள் தாராளமாகக் கடன் கொடுக்க முந்துவர். இவர்கள் கொடுத்து உதவும் கடன் நாட்டின் செல்வச் செழுமைக்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகாது. நாட்டு மக்களைப் பிடித்துள்ள இல்லாமைக்கே இது உரைகல்லாகும்.

எட்டு பேர் கொண்ட காமராசர் அமைச்சர் குழு பதவியேற்றது

சென்னை, எப். 13—

இன்று காலை சென்னை கவர்னரின் முன்னிலையில், எட்டு பேர்களடங்கிய காமராசரின் புதிய மந்திரி சபை, விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டு, பதவியேற்றுக் கொண்டது. மந்திரிகள் பெயரும், அவர்களுடைய இலாகாவின் விவரமும் கீழே தரப்படுகிறது:—

1. கே. காமராஜ்
—(முதல் அமைச்சர்) உள்நாட்டு அமைச்சர்.
2. ஏ. பி. ஷெட்டி
—சுகாதாரம், கூட்டுறவு, வீடு கட்டுதல், முன்னாள் இராணுவத்தினர்.
3. சி. சுப்ரமணியம்
—நிதி, கல்வி, தேர்தல், சட்டம்.
4. எம் பக்தவத்சலம்
—கைத்தொழில், தொழில், விலங்கின மருத்துவம், விவசாயம்
5. மாணிக்கவேலர்,
—நில வருமானம்
6. பரமேஸ்வரன்,
—அரிசன முன்னேற்றம்
7. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி,
—ஸ்தல ஸ்தாபனம்
8. இராமநாதபுரம் ராஜா,
—மராமத்து

தாமோதர் திட்ட நிர்வாக ஊழல்

1 கோடி 64 லட்சம் ரூபாய் நஷ்டம்

புதுடில்லி, எப். 11—

தாமோதர் பள்ளத்தாக்கு கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் பல ஊழல்கள் இருப்பதாகவும், இதனால் கோனார் திட்டத்தில் மாத்திரம் ரூ 1·64 கோடி நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் தாமோதர் பள்ளத்தாக்கு விசாரணை கமிட்டி அறிவித்துள்ளது.

$2\frac{1}{2}$ ஆண்டு காலமாகப் பிரதம எஞ்சினியர் நியமிக்கப்படாததால் திட்டம் அடிக்கடி மாற்றப்பட்டதாகவும், செலவு அதிகரித்து பொதுப் பணம் வீணானதாகவும் கமிட்டி கூறுகிறது.

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டங்களை அமுல் நடத்தும் கார்ப்பரேஷன்மீது பார்லிமெண்ட் கட்டுப்பாடு இருந்தால், இன்னும் நிலைமை மோசமாகிவிடுமென்றும், ஆகவே, இக்கட்டுப்பாடு அவசியமில்லை யென்றும் அக் கமிட்டி தெரிவித்துள்ளது.

பெயருக்கு முன்னால் ஜாதிக் குறிப்பைப் போடாதீர்!

இந்திய உள்நாட்டு அமைச்சர் வேண்டுகோள்

புதுடில்லி, எப். 11—

"எந்த இந்தியரும் தம் பெயருக்கு முன்னாலும் சரி, பின்னாலும் சரி, ஜாதியைக் குறிப்பிடும் பதத்தை உபயோகிக்கக்கூடாது,"

"ஜாதி முறை என்கிற சாபத்தை இந்தியாவிலிருந்து ஒழிக்கவேண்டும்; சர்க்காரிடம் முறையிடுவதால் மட்டும் பிரயோசனமில்லை; ஜனநாயகத்தின் மக்களே எசமானர்களானபடியால் சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை சுயமாக அகற்ற முயலவேண்டும்."

—இவ்வாறு, அகில இந்திய பிற்பட்ட வகுப்பு நிறுவனத்தின் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில், இந்திய உள்நாட்டு மந்திரி டாக்டர் கட்ஜு அறிவித்தார்.

"மானவ சமூகத்தினிடையே ஜாதி பாகுபாடு காட்டப்படுவதை எடுத்துவிட வேண்டு"மென்றும் அவர் மாநில சர்க்கார்களைக் கேட்டுக்கொண்டார்.

முதலில் ஜாதிப் பிற்பட்ட வகுப்பினர் சுயமாக விதித்துக்கொள்ள வேண்டுமென்றும், குடிப்பழக்கம் தான் அவர்களது பிற்பட்ட நிலைமைக்கு ஓரளவுக்குக் காரணம் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

தொழில் துறை குடியிருப்பு வசதி திட்டம்

மத்திய சர்க்கார் மான்யம் ரூ. $25\frac{1}{2}$ லட்சம்

புதுடில்லி, எப். 12—

சர்க்கார் மான்யம் பெற்று தொழிலாளருக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தின் கீழ் மார்ச் மாதத்தில் மத்திய மராமத்து குடியிருப்பு வசதி சப்ளை மந்திரி காரியாலயம் மொத்தம் 1032 வீடுகளை கட்டுவதற்காக சுமார் 25,55,050 ரூபாய் மான்யங்களாக அனுமதித்திருக்கிறது.

மைசூர் சர்க்காருக்கு பெங்களூரிலுள்ள ராஜாஜி நகரில் 454 ஒற்றை அறை ஒற்றை அடுக்கு வீடுகளும், 50 இரண்டு அறை ஒற்றை அடுக்கு வீடுகளும், கட்டுவதற்காக மொத்தம் 6,80,400 ரூபாய் மான்யமாகவும், 7,09,150 ரூபாய் கடனாகவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

முன்னாள் பிரதமர் ஜகனுக்கு 6 மாத சிறை!

ஜார்ஜ்—டவுன், எப்ரல் 12—

பிரிட்டிஷ்கியானா முன்னாள் பிரதமரும் மக்கள் முற்போக்குக் கட்சித் தலைவருமான டாக்டர் ஜகன் தடை உத்தரவை மீறி ஜார்ஜ்டவுனை விட்டுப்போனதாக 6 மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்.

பாக். பார்லிமெண்டில் கூச்சலும் குழப்பமும்

கராச்சி, எப்ரல் 13—

பாகிஸ்தானிலுள்ள அமெரிக்கத் ஸ்தானிகர் ஹில்ட்ரெத் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டதின் சம்பந்தமாக சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டதைக் கண்டிக்க மியான் இப்காருதீன் ஒரு அவசரப் பிரேரணையை கொணர்ந்த போது, பாகிஸ்தான் பார்லிமெண்டில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. அவசர பிரேரணையை சபாநாயகர் நிராகரித்து விட்டார்.

28,146 அடி உயரமுள்ள மலைமீது ஏற முயற்சி!

காட்மாண்டு, எப். 12—

இமயமலையின் மேற்கு பகுதியிலுள்ள இதுவரை மனிதன் ஏற முடியாத 28,146 அடி உயரம் என மதிப்பிடப்படுகிற கஞ்சன் ஜங்கா சிகரத்தின் ஏறி வெற்றி பெற இந்தக் கோடையில் 7 பேர் கொண்ட ஒரு பிரிட்டிஷ் குழு முயற்சிக்கும் எனத் தெரிகிறது.

தஞ்சை மாவட்ட தி. மு. க. 2-வது அரசியல் மாநாடு

நடைபெற்ற நிகழ்ச்சிகள் விவரம்

தஞ்சை மாவட்ட தி மு கழக இரண்டாவது அரசியல் மாநாடு 11—4—54 ஞாயிறன்று காலை 9 மணி அளவில் துவங்கியது மாநாட்டிற்கு, வெளியூர்களிலிருந்தும் கழகக் காளையர் கால்நடையாகவும், 'சைக்கிள்'களிலும் சாரை சாரையாய் வந்த வண்ணமிருந்தனர்.

மாநாடு துவங்கப் போகிற தென்பதை அதிர்வேட்டுக்கள் எழுப்பிய பேரொலியின் மூலம் அறிந்ததும், எங்கெங்கோ, சிதறுண்டு கிடந்த தோழர்களெல்லாம், மாநாட்டின் நுழைவு வாயிலை முற்றுகை யிட்டனர்.

கழகத்தின் இரு வண்ணக் கொடிகள், 'பாரசூட்' மூலம் பந்தலின் உயரே பறக்கவிடப் பட்டன.

இவை யெல்லாம், 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்ற பொதுச் செயலாளரின் கூற்றை நினைவுபடுத்திக் கொண்டிருந்தன.

மாநாட்டை தோழர் ஈ. வெ. கி. சம்பத் துவக்கிவைப்பார் என்ற அறிவிப்பு தோழர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்குக் காரணமாயிருந்தது. தோழர் சம்பத் மாநாட்டைத் துவக்கிவைத்து அரியதோர் அரசியல் சொற்பொழிவை நிகழ்த்தினார்

அடுத்து, வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப்பேசிவிட்டு, மாநாட்டிற்கு தோழர் என். வி. நடராசன் அவர்களைத் தலைமை தாங்கி சிறப்புற நடத்தித் தருமாறு வரவேற்புக் குழுவின் சார்பில் வேண்டிக் கொண்டார்.

அதனை வழிமொழிந்து தோழர்கள் வை. சுப்ரமணியம், மாயவரம் பழனிச்சாமி, என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசினர். தோழர் என். எஸ். இளங்கோ, தோழர் என். வி. நடராசன் அவர்களின் அரசியல்வாழ்வைப் பற்றிய நிகழ்ச்சிகளைத் தொகுத்துச் சொல்லியது, மாநாட்டுக்கு வந்திருந்த தோழர்களுக்கு, தோழர் நடராசனைப் பற்றித் தெரிந்துகொள்ள பெரும் உதவியாயிருந்தது.

தோழர் நடராசனின் தலைமையுரைக்குப் பின் தோழர் சி. பி. சிற்றரசு பேசினார். அத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

பகல் உணவுக்குப்பின், மாலை 3-30 மணிக்கு மீண்டும் மாநாடு துவங்கிற்று.

இதற்குமுன், மாநாட்டின் 'விஷயாலோசனைக் குழுக் கூட்டம்' நடைபெற்று தீர்மானங்களை உருவாக்கியது.

சட்டசபை திராவிடக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களான தோழர்கள் கே ஆர். சம்பந்தம், வேலு, எம். பி சுப்ரமணியம், கரூர் ரத்தினம் ஆகியோர் பேசிய பின் அக்கட்சியின் தலைவர் தோழர் அயம்பிரகாசம் அவர்கள் சிறந்ததோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பின்னர் மாநாட்டுத் தீர்மானங்கள் பதினான்கும், பல தோழர்களால் முன்மொழியப்பட்டு, வழிமொழிந்தும், மாநாட்டினரால் ஏகமனதாக நிறைவேறின

அடுத்து தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ, மு கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் நாட்டு நிலைகள் குறித்து பேசியபின்பு பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், மக்களின் ஆரவாரப் பேரொலிக்கிடையே அவருக்கே உரித்தான, உயர் நடையில், சீரிய கருத்துக்களையும் சிறந்த அறிவுரைகளையுங்கொண்ட அரியதொரு சொற்பொழிவை நிகழ்த்தி முடித்தார்.

தலைவரின் முடிவுரைக்குப்பின் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் நன்றியுரையுடன் மாநாடு முடிந்தது.

இரவு நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினரின் 'ஓர் இரவு' நாடகம் நடைபெற்றது

கருப்பையா கொலை வழக்கு

ஏப். 15-ந் தேதி தீர்ப்பு

மதுரை, ஏப். 12—

மதுரை கருப்பையா பாரதி கொலை வழக்கில் அசெசர்கள் அபிப்பிராயத்தை மதுரை செஷன்ஸ் நீதிபதி என். ரங்கராஜன் அவர்களால் பதிவு செய்துகொண்டு வழக்கு தீர்ப்புக்காக ஏப்ரல் 15-ந் தேதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இரு இந்தியக் குடிமக்கள் சுடப்பட்டனர்

—(:)—

புதுவை எல்லையில் பிரெஞ்சு போலீஸ் அட்டூழியம்

புதுச்சேரி, ஏப். 13—

ஆயுதம் தாங்கிய பிரெஞ்சிந்தியப் போலீஸ்காரர்கள் புதுச்சேரிக்கு 7 மைல் வடக்கிலுள்ள பிள்ளைச்சாவடிக்கு அருகில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் இரண்டு இந்தியக் குடிமக்களுக்கு காயம் ஏற்பட்டது.

ஒருவருக்குக் கையில் நான்கு குண்டுகளும், மற்றவருக்குக் காலில் 2 குண்டுகளும் பாய்ந்தது.

பிரெஞ்சிந்தியப் போலீசார் இந்தியப் பகுதிக்குள் நுழைந்து சுட்டது, இது இரண்டாவது தடவையாகும்.

பெண்கள் பங்கேற்றனர்

புதுச்சேரியின் முக்கிய வீதிகள் வழியே 80 தொண்டர்கள் இணைப்பு ஒலிகளை முழக்கிக் கொண்டு கொடிகளைத் தாங்கி ஊர்வலமாகச் சென்றனர்.

ஆறு பெண்கள், கையில் தங்கள் குழந்தைகளைத் தாங்கிக் கொண்டு ஊர்வலத்தின் முன் சென்றனர்.

ஊர்வலம் சென்று கொண்டிருந்தபோது போலீசார் திடீரென வந்து அனைவரையும் கைது செய்து போலீஸ் லாரியில் ஏற்றிச் சென்றனர்.

தி. மு. கழகம், இளைஞர் காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள், பிரெஞ்சிந்திய தேசியவாதிகள் முதலிய கட்சிகளின் பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாஹியில் சித்திரவதை!

இந்தியாவுடன் இணைப்புகோரி பாதூரில் அறப்போர்க்கிளர்ச்சி செய்த கே. மாதவ குருப், பாலகிருஷ்ண நாயர் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு, பகிரங்கமாகச் சித்திரவதை செய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளியே இரண்டு மைல் தொலைவில் ஒரு சந்தில் எறியப்பட்டிருந்தனராம்.

விநாயகம் குழுவினர் மீது வழக்கு

—(:)—

ரூ. 200 ஜாமீன் மீது 3-வது எதிரி விடுதலை

அரக்கோணம், ஏப். 13—

திருத்தணியில் நடந்த தி. மு கழக பொதுக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்தும், தோழர் கனைத் தாக்கியும், தோழர் ஏ. எஸ். சி கிருட்டிணசாமியின் காரை சேதப்படுத்தியதாகவும் விநாயகம் குழுவினரைச் சேர்ந்த அறுவர் மீது திருத்தணி போலீசார் தொடர்ந்த வழக்கு இன்று சந்திரகிரி அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த வாயிதாவுக்கு ஆஜராகாத 3-வது எதிரி கோர்ட்டில் சரண் அடைந்தார் கடந்த வாயிதாவிற்கு வராததால் அவரைக் கைது செய்ய மாஜிஸ்திரேட் உத்திரவிட்டார். ரூ. 200 ஜாமீன் மீது அவர் விடுதலை செய்யப்பட்டார்.

எதிரிகளுக்கு ஆஜராகியிருந்த வக்கீல் பேசுகையில் எதிரிகள் மீது, குற்றம் சுமத்தப்பட்ட தேதி 26—9—53 என்றும், ஆந்திர மாநிலப் பிரிவினையை முன்னிட்டு பல குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டார்கள் என்றும், சிறைக் கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளார்களென்றும், எனவே இந்த வழக்கையும் ரத்து செய்து விடுமாறு கேட்டுக்கொண்டார்.

வாதத்தை மாஜிஸ்திரேட் ஏற்க மறுத்து, இந்த வழக்கை ரத்து செய்ய எந்தவிதமான ஆதாரமும் காட்டப்படவில்லை என்றும், வழக்கை வாபஸ் பெறும் அதிகாரம் தனக்கில்லையென்றும், வேண்டுமானால் அரசாங்கத்திற்கு மனுச் செய்து கொள்ளலாமென்றும், கூறினார்.

எதிரிகள் வக்கீல் மீண்டும் வாதிடையில், இந்த வழக்கை திருத்தணி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கு மாற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

'இந்தவழக்கிற்குறிப்பிட்டுள்ள கடும் செக்ஷன்களை விசாரிக்க சப்-மாஜிஸ்திரேட்டுக்கு அதிகாரமில்லை; எனவே மாற்ற முடியாது,' என்று மாஜிஸ்திரேட் கூறிவிட்டார்.

வழக்கு 21—4—54க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தி. மு. க. பாதையில் காங்கிரஸ் திருவாட்டி

—:o:—

தேசிய வாரத்தில் கைத்தறி ஆடைகள் விற்றார்!

சென்னை, ஏப்ரல் 12—

தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தேசிய வாரக் கொண்டாட்டத்தின் ஒரு அம்சமாக இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த தோழியர்கள் அனந்தநாயகி, ராஜம்பாரதி; ராஜலட்சுமி மற்றும் சில பெண்மணிகளும் வீதி வீடாகச் சென்று சுமார் ரூ. 1,500 பெறுமான கைத்தறி துணிகளை விற்பனை செய்தனர்.

புதிய கல்வித் திட்டத்தை ரத்து செய்யக் கோரிக்கை

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டில் தீர்மானம்

சென்னை, ஏப். 13—

புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்று சர்க்காரை வற்புறுத்துவதாக 11—4—54 மாலை மெமோரியல் ஹாலில் நடைபெற்ற சென்னை நகர ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டை டாக்டர் வரதராசலு நாயுடு ஆரம்பித்துவைத்தார் எஸ். பி. ஆதித்தன் தலைமை வகித்தார்.

சென்னை நகர ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் சங்கத் தலைவர் எம். எஸ். சீனிவாசன் நல்வரவு கூறினார். செயலாளர் வி. ராமுண்ணி மேனன் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார்.

தோழர்கள் பி. வீரராகவன், வேதநாயகம், ராமுண்ணி ஆகியோரும் பேசினர்.

தீர்மானங்கள்

சம்பளக் கமிஷனின் சிபார்சுப்படி ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டுமென சர்க்காரை வற்புறுத்துவதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கமே ஆரம்பக் கல்வியை எடுத்துக்கொண்டு நடத்தவேண்டுமென்றும் எயிடெட் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்றும் மற்றொரு தீர்மானம் நிறைவேறியது.

புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் ஆசிரியர்களின் வேலைப் பளுவை அதிகரிப்பதாலும், ஆசிரியர்கள் வேலையை இழக்கும்படி செய்வதாலும் அந்தத் திட்டத்தை ரத்து செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேர்தல்களில் பொதுத் தொகுதிகளிலிருந்து ஆசிரியர்கள் போட்டியிட அனுமதிக்கும்படி சர்க்காரிடம் விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டது.

...விசாரணையின்றி ஆசிரியர்களின் சர்டிபிகேட்டுகளைக் கல்வி அதிகாரிகள் ரத்து செய்வதற்கான அதிகாரத்தை ரத்து செய்ய வேண்டுமென்று மாநாடு கோரியது. பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்டத்தை மாநாடு ஆதரித்தது.

ரங்கூனில் இந்தியர் மக்கள் தொகை வீழ்ச்சி

ரங்கூன், ஏப் 14—

ரங்கூனில் இந்தியரின் மக்கள் தொகை சென்ற 22 ஆண்டில் பாதிக்குமேல் குறைந்துவிட்டது 1931-ல் மொத்தம் 3,85,000 இந்தியர்கள் இருந்தனர். 1953-ல் அங்கிருந்த இந்தியர் மக்கள் தொகை 1,40,396 தான். ஆனால் சீனரின் மக்கள் தொகை இரண்டு பங்குக்குமேல் அதிகரித்திருக்கிறது.

இதற்குக் காரணம், பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் இருந்தது போல் பர்மா இப்போது அவ்வளவு வசதியாகயில்லை என்று இந்தியர் நினைத்ததே என்று ஜனக் கணித அறிக்கை கூறுகிறது. சீனாவிலுள்ள கஷ்டத்துக்கு பர்மா எவ்வளவோ மேல் என்று சீனர் கருதியதே அவர்களில் அதிகம் பேர் வந்து குடியேறியதற்குக் காரணமாயிருக்கலாமென்று அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

மைசூர் சர்வ கலாசாலை ஒரு சுயேச்சையான ஸ்தாபனமல்ல என்று சொல்லி சர்வ கலாசாலை மானியக் கமிஷன் அதற்கு மானியம் ஒதுக்க மறுத்துவிட்டது.

வரதட்சணையை ரூபாய் நூறுக்குக் கட்டுப்படுத்தியதின் எதிரொலி!

மணத் தரகர்களிடையே பரபரப்பு

ஜலந்தர், ஏப் 12—

வரதட்சணையை ரூபாய் நூறுக்கு மேல் போகவிடாமல் கட்டுப்படுத்தும் சட்டம் ஒன்று பஞ்சாப் சட்டசபையில் நிறைவேறி இருக்கிறது.

சட்டத்தை அமுல் நடத்துவதற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கோரப்பட்டு இருக்கிறது. தலைவரின் ஒப்புதல் கிடைப்பதற்குள்ளாக, மணத் தரகர்கள், தங்களிடம் முடிவு காணாமல் தேங்கிக் கிடக்கும் மணவினை பணிகளை உடனடியாக நிறைவேற்றுவதில் தீவிரம் காட்டுகின்றனர். பெருந்தொகையை வரதட்சணையாகக் கொடுக்க வேண்டுமென பிடிவாதம் பேசிக் கிடந்த மாப்பிள்ளைகள், மேலும் பேரம் பேசுவதை நிறுத்திக்கொண்டு, பெண் வீட்டினர் கொடுக்க முன்வந்த வரதட்சிணையைப் பெற்றுக் கொண்டு, பெண்களை மணமுடித்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

புரோகிதர்களுக்கும், நல்ல கிராக்கி ஏற்பட்டு இருக்கிறது. நூற்றுக் கணக்கானவர்கள் தங்கள் மணவினைகளை முடித்துவிட வேண்டுமென புரோகிதர்களை நெருக்கி வருகின்றனர்.

'பராசக்தி'—நாடகம்

சங்கரமங்கலம் ஸ்ரீநிவாசநல்லூர் கிராம பாரதி வாலிபர் சங்க ஆதரவில் 1-4-54 இரவு 9-30 மணிக்குத் தோழர் டி. ஆர். சுப்ரமணியம் தலைமையில் 'பராசக்தி' நாடகம் நடைபெற்றது.

தலைவர் நாடகத்திலுள்ள ஏற்பட்டும் மறுமலர்ச்சியையும் சீர்திருத்த இயக்கம் செய்துவரும் நாடக பிரசாரத்தையும் குறிப்பிட்டுப் பேசினார்.

சேலம் மாவட்ட தி. மு. க. இரண்டாவது மாநாடுகள்

சேலம், ஏப்ரல் 10—

9—4—54 மாலை $3\frac{1}{2}$ மணிக்கு மாவட்டத்திலுள்ள கழகப் பிரமுகர்களின் கூட்டம் ஒன்று வரவேற்புக் குழுத் தலைவர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது போது அண்மையில் நடக்க இருக்கும் மாநாட்டின் வெற்றிக்காக என்னென்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி ஆலோசனைகள் நடத்தப்பட்டது.

மாநாட்டின் பந்தல் மிகப் பெரிய அளவில் (300'×200') போடுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டு வேலைகள் துவங்கப் பட்டு விட்டன.

மாநாட்டு அலுவலகத்திலும், மாநாட்டுக் கொட்டகையிலும் இரண்டு டெலிபோன்கள் தனித் தனியாக அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று விட்டன.

அதிகப் பெட்டிகள் ரயில் வண்டிகளில் இணைப்பதற்கும், டவுன் பஸ்கள் (இரவு நேரங்களில்) அதிகமாக விடுவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

மாவட்டப் படம் ஒன்று மிகப் பெரிய அளவில் (8'×10') வரைந்து கிளைக் கழகங்கள் உள்ள இடங்களையும், மாவட்டத்தின் முக்கியப் பகுதிகளையும் குறித்து மக்கள் மனதைக் கவரும் வகையில் மாநாட்டில் வைக்கப்படும்.

மும்முனைப் போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்ற சேலம் மாவட்டத் தோழர்களின் புகைப் படங்கள் அழகிய முறையில் மாநாட்டில் மக்களின் பார்வைக்கு வைக்கப் படும்.

சமூக சீர்திருத்த மாநாட்டில் ஏ. கோவிந்தசாமி தலைமையுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தவர்கள்; விலைவுகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் போல், நிலைமைகளுக்குக் கொடுக்க விரும்பாதவர்கள்; மனிதனைச் சுற்றியுள்ள நிலைமைகளை மாற்றி அமைப்பதை விட, சூழ்நிலை நல்லதாக ஏற்பட்ட பின்பே மனிதன் பிறக்கட்டும் எனக் காத்திருப்பவர்கள்; 'நெய்க்குத் தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா?'—என்ற கேள்விக்கு, 'தொன்னை தான் நெய்யைத் தாங்குகிறதென்றாலும், நெய் இல்லாவிட்டால், தொன்னை நல்லதாக இருந்துதான் பயன் என்ன? என்று கேட்பவர்கள்; அதாவது, தொன்னையைக் கண்டுபிடித்ததே நெய்யை ஊற்றி வைக்கத்தான் என்பதே அவர்கள் படித்த படிப்பின் லட்சணம்!

படிப்பு என்று நான் குறிப்பிடுவது, கல்லூரிப் படிப்பை அல்ல மக்களிடமிருந்து கற்ற வாழ்வுப் படிப்பை—அவர்களுக்கு உழைப்பது எப்படி என்பதைத் தெரிந்து வைத்திருக்கும் வாழ்வுப் படிப்பை!

இந்தப் படிப்பிலே, இன்றைய நிலையிலே, இந்த நாட்டிலே, நம்மை விடத் தேர்ந்தவர்கள் யாரும் கிடையாது. நமக்குச் சரியாகப் பணியாற்ற, எந்தக் கட்சியாலும் முடியாது.

இன்று, திடுக்கிடத்தக்க வகையிலே, மக்கள் வாழ்வை சொர்க்க வாழ்வாக மாற்றி, மகோன்னதமாக அரசியல் நடத்தும் நாடுகளை முன்மாதிரியாக வைத்து, நமது அரசியலும் இதுபோல் அமைய வேண்டும் என்று அடித்துக்கூறும் தோழர்களுக்கு இந்த மாநாட்டின் மூலமாக ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது அவைகள் பெற்றுள்ள அந்தஸ்தை அடைவதற்கு சமுதாயத்திலே எவ்வளவு சீர்திருத்தங்களை மேற்கொண்டிருக்கின்றனவென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அரசியல் மாற்றத்தினால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்துச் செய்யப்பட்ட எத்தனையோ புரட்சிகள் தோற்றுப்போன காரணங்கள் எவை என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

1917-ம் ஆண்டிலே வெற்றிக் கொடி நாட்டிய ருஷ்யப் புரட்சி, 1905-ம் ஆண்டிலே, கேவலமான முறையிலே தோல்வியுற்றதற்குக் காரணம் பலபலச் சொல்லிச் சப்பைக் கட்டலாம். ஆனால் சமுதாயத்திலே ஒருவித விழிப்பு ஏற்படாத நிலையில் அரசியல் மாற்றங்கோரி நின்றதால்தான் தோல்வியுற்றதென்பதை யாரும் மறுக்க முடியாது.

சீனத்திலே பொதுவுடைமைப் புரட்சி வெற்றிகரமாக நடந்தேறியது எந்தக் காரணத்தால்? ஏறக்குறைய 30 ஆண்டுகளாகப் போராடி வெற்றி காண முடியாத சுதந்திரத்தை, உலகப் போர் முடிந்து இரண்டே ஆண்டுகளில் பெற்றுவிட்டதற்குக் காரணம் என்ன?

சமுதாயத்திலே விழிப்பு ஏற்பட்டதுதான். போரின் காரணமாக ஏற்பட்ட நெருக்கடியினால், பல நாடுகளின் சமுதாய அமைப்பு இயக்கிவரும் அட்டுக்கோப்பைக் கண்டதினால் ஏற்பட்ட அனுபவத்தைக்கொண்டு, தங்களுடைய சமுதாயத்திலே பல விரும்பத்தகாத முறைகள் பலவந்தமாக—சம்பிரதாயங்கள் என்ற பேரால் திணிக்கப்பட்டிருப்பதையும், அந்த மோசமான அமைப்புகளுக்கு சியாங் சர்க்கார் ஆதரவாக நிற்பதையும் தெளிவாகக் கண்டார்கள், அவைகளை அடியுடன் மாற்றியமைக்க விரும்பினார்கள். ஆகவே, கம்யூனிஸ்ட் புரட்சிக்கு பல்லாண்டு பாடி வரவேற்றார்கள்.

சியாங் ஆட்சி காலத்தில் சீன மக்கள், பொருளாதாரத்தில் சரி சமமாக ஆவதைவிட, மனிதரிலே சரிசமமாகவே பெரிதும் விரும்பினார்கள். பொருளாதார ஏற்றத்தின் காரணமாக மேல்படிக்காரர்கள் அனுபவித்து வந்த இன்பங்களைவிட, உயர் பிறப்பாளன் என்ற முறையிலே உரிமை கொண்டாடிவந்த பரம்பரைச் சலுகைகளைக் கண்டே சாதாரண சீன மக்கள் மனம் புழுங்கினார்கள். தனக்குச் சொந்தமாக நிலம் வேண்டுமென்பதைவிட நிரந்தரமாகப் பயிர் செய்ய நிச்சயமான ஒரு நிலம் தேவை என்றே ஒவ்வொரு சீனனும் நினைத்தான்.

இதுதான் சீனப் புரட்சிக்கு ஆதரவாக நின்ற சூழ்நிலை.

மக்களின் இந்த மனப்போக்கை சரியாகத் தெரிந்துகொண்டு திறமையாகப் பணியாற்றினார், மாசேதுங்.

17-ம் நூற்றாண்டுவரை ஆட்பரப் பொருள்களை ஏழை மக்கள் உபயோகிக்கக் கூடாது என்ற சட்டம் பல நாடுகளில் இருந்தது. சமூக அந்தஸ்துக்குத் தக்கபடி, இன்னமாதிரியான உடைதான் அணியவேண்டும் என்ற சட்டமும் கண்டிப்பாக அமுல் செய்யப்பட்டு வந்தது "ஆண்டவனால் சிருஷ்டிக்கப்பட்ட" உயர்ந்தவர்க்கத்தாரைத் தவிர, மற்ற கீழ் மக்கள் டப்பாக்களில் அடைத்த மாமிசப் பலகாரங்களை உண்ணக் கூடாது என்ற சட்டமும் இருந்தது. 1752-ம் ஆண்டில் தாமஸ் ஆல்காக் என்பவர், கீழ் மக்கள் பொடி போடுவதையும், டீசர்க் குடிப்பதையும், வண்டியில் போவதையும் கண்டு ஆத்திரப்பட்டார் ஆண்டவனே பார்த்து சிருஷ்டி செய்த கீழ் ஜென்மங்களுக்கு இந்தச் சலுகைகள் கூடாது என்று சொல்லி, பார்லிமெண்டில் ஆவேசமாகப் பேசினார்.

இந்த நிகழ்ச்சிகள் வெறும் பொருளாதார ஏற்றத் தாழ்வையும், அரசியல் விவகாரங்களையும் மட்டுமா நமக்கு உணர்த்துகிறது? ஆண்டவனே சிருஷ்டித்த கீழ் மக்கள் என்றுதான், ஒவ்வொரு மேல்குடி மகனும் பேசிவந்தான். அந்த ஆண்டவன் சிருஷ்டியையே அம்பலமாக்குவதல்லவா இதுபோன்ற தீமைகளை ஒழித்துக்கட்டச் சரியான வழி?

ஜார் மன்னன், அதிகார அம்புகள் தன்னிடம் இருந்ததால் மட்டும், கொடுமைகளின் எல்லைக்குச் சென்று திரும்பவில்லை. மக்களைக் கசக்கிப் பிழியவே ஆண்டவன் தன்னைப் படைத்ததாக நினைத்து வந்ததும் ஒரு காரணம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதேபோல, நிர்க்கதியான நிலைமையில் தாங்கள் இருந்ததால் மட்டுமே, ருஷ்ய மக்கள் மன்னனின் கொடுமைகளைச் சகித்துக்கொண்டிருக்கவில்லை. அவன் அடக்க, நாங்கள் அடங்குவதே 'தெய்வ நீதி' என்றும் கருதி வந்தார்கள். இந்தத் தவறான கருத்து மாற்றியமைக்கப்பட்ட பின்புதான் லெனின் உயர்ந்தான்—ஜார் வீழ்ந்தான்! லெர்மண்டோவ் பிலின்ஸ்கி, கார்க்கி போன்றோர்கள், சமுதாய சீர்திருத்தம் பேசிய பிறகே லெனினும் ஸ்டாலினும் அரசியல் சீர்திருத்தம் பேச முடிந்தது என்பதை நானல்ல, சரித்திரம் சொல்லுகிறது.

அதேபோல, சன்யாட்சன் மஞ்சு வம்ச மன்னனை ஒழித்துக்கட்டப் போராடிக்கொண்டே, சீனரின் அவமானச் சின்னமான நீளத் தாடியையும் விகாரத் தலைச்சடையையும் வெட்டிக்கொண்டு வந்தான்.

கமால்பாட்சா, கோஷா முறை ஒழிப்பே, அரசியல் விடுதலைக்கான திறவுகோல் என்று தீர்மானித்துப் பணியாற்றினான்.

ஜப்பானிய சமுராய்களின் போலித் திரையைக் கிழித்தெறிந்த பின்னரே, ஜப்பானிய மக்கள் உலக நாடுகளோடே பகைத்துக்கொண்டு தனித்து வாழும் அளவுக்கு உயர முடிந்தது.

இன்று பணம் படைத்தவர்கள் கோலாகல வாழ்வு வாழ்வது அவர்களுக்குள்ள வசதி ஒருபுறமிருப்பினும், மக்களின் ரத்தத்தில் ஊறிக் கிடக்கும் தலைவிதித் தத்துவமும் ஒரு காரணமாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

மேல் ஜாதி—கீழ் ஜாதி என்ற பிரபுத்துவ ஏழை பேதம், ஆண்டவன்—மதம்—ஆகியவைகளின் பேரால் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஊர்ஜிதத்தின் காரணமாக, ஆண்டவன் பேரால், ஏற்பட்டிருக்கும் ஊழ்வினைத் திரையைப் போட்டு, மேல் ஜாதிக்காரர்கள் கீழ்ப்படியிலுள்ளவர்களை முன்னுக்கு வரவொட்டாமல் தடை செய்கிறார்கள். தங்களுடைய அந்தஸ்து, சொத்து முதலியவைகளைக் காப்பாற்ற எப்பொழுதும் இராணுவமும், போலீசும் தயாராக இருக்கிறதென்ற தைரியத்தில், மேல் ஜாதிக்காரர்கள் ஆடம்பரமாகவும் மிடுக்காகவும் வாழ்கிறார்கள். சமுதாய அமைப்பில் தங்களுக்குத்தான் எல்லா வசதிகளும் உரிமைகளும் இருக்கிறதென்ற எண்ணத்தில், அதை வற்புறுத்த, அகம்பாவத்துடன் நடந்துகொள்கிறார்கள். இந்த அகம்பாவத்தை நிலைநாட்டிக்கொள்ளவும், யாரும் எதிர்க்கக் கூடாது என்ற நினைப்பாலும் எதை எதையோ செய்து பார்த்தார்கள்—பார்க்கிறார்கள்.

மேல், கீழ் ஜாதி முறையைக் கடுமையாக எதிர்த்த எத்தனையோ மனித குல மாணிக்கங்களை, ஜாதி வெறியர்கள் தங்களுடைய சாகசத்தால் நிர்மூலமாக்கிவிட்டிருக்கிறார்கள்.

சமரச சன்மார்க்கம் என்ற தத்துவத்தை உபதேசித்த ராமலிங்க அடிகள், ஜோதியாகிவிட்டார் என்ற பொய்யைச் சொல்லி படுகொலை புரிந்துவிட்டார்கள். மூட நம்பிக்கையிலிருந்து விடுபடாத நமது அப்பாவி மக்களும் அதை நம்பி, ராமலிங்க அடிகளை ஒரு கடவுளாக்கி அவருடைய போதனையைப் புறக்கணித்துவிட்டார்கள்,

புத்தர் தர்மங்கள் பொசுக்கப்பட்டதும், மேல் கீழ் ஜாதி முறையைக் கண்டித்த காரணத்தால்தான்.

ஒரு மாபெரும் சமுதாயத்தையே மறுபடிமுன் பாம்பாக மாற்றி, சுதந்திரக் கனலைக் கொழுந்துவிட்டெரியச்செய்த மாவீரன்—காந்தியாரையே ஒரு சாதாரண மத வெறி துளைத்துக் கொன்றுவிட்டது. சுதந்திர உணர்ச்சியைவிட, மத வெறி எவ்வளவு பலம் பெற்றுத் திகழ்கிறது!

புத்தனின் சின்னத்தையுடைய ஆட்சி வாயளவில் புத்ததர்மம் பேசிக்கொண்டே—மதச் சார்பற்ற அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டே மதக் காரியங்களுக்கும்—மூட நம்பிக்கைகளுக்கும் முழு ஆதரவு கொடுத்து வருகிறது.

மதச் சார்பற்ற ஆட்சியாக இருக்குமானால் கும்பமேளா கோர தாண்டவம் தடை செய்யப்பட்டிருக்கும். எந்த மதக்காரனும் காட்டுமிராண்டித்தனமான காரியத்தை மதத்தின் பேரால் கையாளக் கூடாது என்ற கடுமையான சட்டம் பிறந்திருக்கும்.

இந்த மாவட்டத்தைச் சேர்ந்த கும்பகோணத்திலே, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் 'மகாமகம்' என்ற 'கும்பகோணம் மேளா'வுக்கு வரும் மக்கள், அரசாங்கத்துக்கும் சமூகத்துக்கும் எவ்வளவு தீங்கிழைக்கிறார்கள்? மகாமகத்தின்போது வந்திருக்கும் மக்களுக்கு மத்தியில் ஏற்படும் தொத்து நோய்களை சமாளிக்க அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் கஷ்டமும்—ஏற்படும் பொருள் நஷ்டமும் எவ்வளவு?

ஒரு காரியத்தை அனுமதித்துவிட்டு, இவ்வளவு கஷ்டங்களை ஏற்றுக் கொள்வதைவிட, முதலிலேயே இது போன்ற 'மேளா'க்களைத் தடை செய்தால் என்ன?

'கும்பமேளா'வுக்கும் கும்பகோணம் மேளாவுக்கும் இருக்கும் ஒரே ஒரு வித்தியாசம் அங்கு நிர்வாண ஊர்வலம் வரும், இங்கு அது கிடையாது. இந்த ஒரே ஒரு வித்தியாசத்துக்குக்கூட காரணம், தென்னாட்டின் பண்பு ஒரு பக்கமிருந்தாலும், நமது நாட்டிலே இடைவிடாது இருந்து வரும் பகுத்தறிவுப் பிரசாரமும், சுயமரியாதைப் பேச்சுகளுமாகும்.

அதிலும் பெரியார் ராமசாமி, அறிஞர் அண்ணாவோன்றோரின் உழைப்பு நமது நாட்டிலே, மூட நம்பிக்கைகளை ஒழிப்பதில் கொஞ்சம் மெதுவாக இருந்தாலும், புது மூட நம்பிக்கைகள் புகுவதற்கு இடமளிக்கவில்லை.

இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக, மேல் ஜாதிக்காரர்களின் சொகுசான வாழ்வை நீடிக்கச் செய்வதே, சமீபத்தில் நமக்கெல்லாம் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

நாம் ஆற்றிய பெருந்தொண்டின் காரணமாக, விழிப்புற்று வரும் மக்கள், கல்வித் திட்டத்தை கருவிலேயே சிதைத்துவிட கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கல்வித் திட்டத்திலே காட்டிய விழிப்பைப் போலவே சமுதாயத்தின் ஒவ்வொரு அநீதியான பகுதியையும் எதிர்த்துப் போராடுவோம்!

சமுதாய அநீதியால் ஏற்றங்கொண்ட மேல் வர்க்கத்தாரைவிட, அதை அனுபவித்துவரும் சமுதாயத்தின் முதுகெலும்பான நமக்குத்தான், சமுதாயம் சீர்திருத்துவதிலே அதிக அக்கறை இருக்க வேண்டும்.

மேல் ஜாதிக்காரர்களுக்கு ஒரே கடவுள்; அதுவும் மற்றவன், கோபத்தையும், கனல் தெறிக்கும் நீதி வாதத்தையும் காணும்போதுதான், அந்தக் கடவுளையும் துணைக்கழைக்கிறான். நமக்கோ, முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்...... மாரி, சூலி, வீரன், மாடன், காட்டேரி, காடன் இத்யாதி...

அவன், ஆண்டவனுக்கு ஆடம்பரமான பூசையோ, அபிஷேகமோ, அளவிறந்த மான பொருள் செலவையோ கையாளுவதில்லை. நாமோ, கும்பமேளா நெரிசல்களுக்கு இரையாகிச் சாகிறோம்.

அவன் வீட்டுப் பெண்களுக்கு ஆடவும், பாடவும் நினைத்தவனை மணக்கவும் பரிபூரண சுதந்திரம் உண்டு. நமது வீட்டுப் பெண்களுக்கு என்ன சுதந்திரம் கொடுக்கிறோம் என்பதை இங்கு வந்திருக்கும் உங்களைப்பொறுத்தவரையிலாவது நெஞ்சில் கை வைத்து நினைத்துப் பாருங்கள்!

கடவுள்—மதம் ஆகியவைகளுக்கு, தேவைக்கு அதிகமாகவே நாம் தண்டம் செலுத்தி விட்டோம். இனி நமது நாட்டை—நமது சந்ததிகளைக் கவனிப்போம். சமுதாயத்திலே நம்மைப் பிடித்து வரும் சம்பிரதாய விலங்குகளைப் பொடிப் பொடியாக்குவோம். விழிப்புற்ற சமுதாயத்தை—விவேகமுள்ள சமுதாயத்தை உருவாக்க நாம் பாடுபடுவோம்.

வெறும் அரசியல் மாற்றத்தின் காரணமாகவே நமது பீடைகள் ஒழியாது. அரசியல் மாற்றமே அனைத்துக்கும் மருந்து என்பதில்லாமல், அதற்கும் மேலான ஒரு சூழ்நிலையை உருவாக்கப் பாடுபடுவோம்.

நாம் இதுபோன்ற மாநாடுகளின்போது எடுத்துக்கொள்ளும் உறுதி ஆண்டவன் பேரால், மதத்தின் பேரால், ஜாதியின் பேரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அநியாய ஏற்பாடுகளை அழிக்கட்டும்,"

ஆசிய நாடுகளிடை அநாக்கிரமிப்பு ஒப்பந்தம்

இலங்கையின் யோசனை!

கொழும்பு, ஏப். 11—இந்த மாதக் கடைசியில் ஆரம்பமாகப்போகும் ஆசியப் பிரதம மந்திரிகள் மாநாட்டில், இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை, இந்தோனேஷியா ஆகிய 5 நாடுகளின் பிரதமர்களும் கூட்டாக ஒரு அநாக்கிரமிப்பு பிரகடனம் வெளியிட வேண்டுமென மாநாட்டில் இலங்கை யோசனை கூறுமென அதிகார வட்டாரங்களில் கூறப்பட்டதாகத் தெரிகிறது.

ஒரு நாட்டின் விவகாரங்களில் மற்றொரு நாடு தலையிடலாகாதென்றும் பிரகடனத்தில் வகை செய்யப்படவேண்டுமென இலங்கை யோசனை கூறுமெனத் தெரிகிறது.

ரூ. 22 லட்சம் தங்கம் கைப்பற்றப்பட்டது

புதுடில்லி, ஏப். 9—1954-ம் ஆண்டு முதல் 1½ மாத காலத்தில் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்ட 27,290 தோலா தங்கத்தை சுங்க இலாகா கைப்பற்றியுள்ளது என்றும். இதன் மதிப்பு ரூ 21,95,994 என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1953-ல், சுங்க இலாகா அதிகாரிகள், 31,247 தோலா தங்கம் கைப்பற்றினர்; அதன் மதிப்பு ரூ. 25,40,735

திராவிட முன்னேற்றக் கழகத் தக்காக தோழர் இரா.செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. வி. அண்ணாதுரை, எம். ஏ.